## ஸ்ரீ வானமாமலை மடத்து சாற்றுமுறை

பல்லாண்டு பல்லாண்டுபல்லாயிரத்தாண்டு*
பலகோடிநூறாயிரம்*
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா!* உன்
செவ்வடிசெவ்விதிருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும்பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு*
வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்ற மங்கையும்பல்லாண்டு*
வடிவார்சோதிவலத்துறையும்சுடராழியும் பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

(பெரிய சீயர் அருளிச்செய்தது)

ஸர்வதேச தசாகாலேஷ்வ வ்யாஹதபராக்ரமா
ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்

(கந்தாடையண்ணன் அருளிசெய்தது)

ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோகஹிதைஷிணீ

(உடையவர் அருளிச்செய்தது)

ஸ்ரீமந் ஸ்ரீரங்கஸ்ரீயமநு பத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்கஸ்ரீயமநு பத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய

(பெரிய ஜீயர் அருளிச்செய்தது)

நமஸ்ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே
ப்ரஸாதலப்த ப்ரமப்ராப்யகைங்கர்ய சாலிநே

(நம்பெருமாள் அருளிச்செய்தது)

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

(ஸ்ரீநிவாஸாசார்யர் (அ) மஹாசார்யர்)

ரம்யஜாமாத்ருயோகீந்த்ர பாதரேகாமயம்ஸதா
ததாயத்தாத்ம ஸத்தாதிம் ராமாநுஜ முநிம் பஜே

(மடத்துப்பிள்ளை அருளிச்செய்தது)

வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்*
வாழும்மணவாளமாமுனிவன்*-வாழியவன்
மாறந்திருவாய்மொழிப்பொருளை * மாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

(ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது)

செய்யதாமரைத்தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபிவாழியே *
துய்யமார்பும்புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே *
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கியகண்ணிணை வாழியே *
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழிபுகழ்வாழிவாழியே.

அடியார்கள் வாழ அரங்கநகர்வாழ *
சடகோபன் தண்தமிழ் நூல்வாழ *-கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ * மணவாளமாமுனியே!
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஓன்னான வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி வாழி

திருவிருந்த மலர்த்தாள்கள் வாழியே
சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவிருந்தகை முக்கோலும் வாழியே
தடம்புயத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
வாழ்த்தி வாய்ந்தருள் வாய்மலர் வாழியே
கருணைமேவு மிராமாநுச முனி
கனகமௌலி கலந்தூழி வாழியே.

(பிறகு அவரவர் ஆசார்ய தனியன்களை அநுஸந்திக்கவும். Refer www.vanamamalai.com/acharyas/vAnamAmalai-tvts-tml.pdf)

********